1. **Describe the important recommendations of Balwant Rai Mehta Committee for Local Self Government?**
**உள்ளாட்சி நிர்வாகம் சார்ந்த பல்வந்த ராய் மேத்தா குழுவின் முக்கிய பரிந்துரைகள் யாவை?**

# பல்வந்த்ராய் மேத்தா குழு

உள்ளாட்சி அரசாங்கமானது தன்னுடைய தற்போதைய வடிவத்தை அடைவதற்காக பல்வேறு நிலைகளை கடந்துவர வேண்டியிருந்தது. இந்த மாறுதல்களுடன் பல்வேறு குழுக்கள் சம்பந்தப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே பல்வந்த்ராய் மேத்தா குழு. இக்குழு 1957-ல் தேசிய வளர்ச்சி குழுவினால் உருவாக்கப்பட்டது. இக்குழு, சமுதாய வளர்ச்சி திட்டங்களின் செயல்பாட்டை ஆராய்ந்து பரிந்துரை வழங்க உருவாக்கப்பட்டது.

**பல்வந்த்ராய் மேத்தா குழு:**

1952ல் தொடங்கப்பட்ட சமுதாய வளர்ச்சி திட்டம், 1953ல் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய விரிவாக்க திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் அமலாக்கத்தை மதிப்பீடு செய்யவும், அந்த திட்டங்களின் தோல்விக்கான காரணங்களை ஆராயவும், குறிப்பாக ஊரக உள்ளாட்சி அமைப்பான பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை சீர்படுத்தி பலப்படுத்தவும் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனவரி 16, 1957ல் பல்வந்த்ராய் அவர்களை தலைவராக கொண்ட குழுவினை இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியது.

**குழுவின் உறுப்பினர்கள்:**

1. திரு. பல்வந்த்ராய் மேத்தா, தலைவர்
2. Dr. S.D. சர்மா, உறுப்பினர் மத்திய பிரதேச அமைச்சர்
3. திரு. தக்கூர்.ஃபூல் சிங் - உறுப்பினர், உத்திரபிரதேச அமைச்சர்
4. திரு. B.G. ராவ் - உறுப்பினர் மத்திய பிரதேச அரசாங்கத்தின் முன்னாள் தலைமை செயலாளர்
5. திரு. G. ராமச்சந்திரன் உறுப்பினர் (குழுவினால் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்)

**குழுவின் முக்கிய பரிந்துரைகள்:**

சமுதாய வளர்ச்சி திட்டங்கள், தோல்வி அடைவதற்கான முக்கிய காரணம் அத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஜனநாயக பரவலாக்கல் முறை பயன்படுத்தப்படாததே. இம்முறையை பின்பற்றினால் வெற்றியை அடைய முடியும் என்று இக்குழு பரிந்துரைத்தது, இதன் முக்கிய மூன்று கண்டுபிடிப்புகள் கீழ்வருவன.

1. தேசிய விரிவாக்க பணி மற்றும் சமுதாய வளர்ச்சி திட்டம் தோல்வியடைய மிக முக்கிய காரணம் இத்திட்ட நிறைவேற்றலில் மக்களின் பங்கேற்பு இல்லாமல் போனதாகும்.

2. சமுதாய வளர்ச்சி திட்டங்களில், பஞ்சாயத்திற்கு மேல் நிலையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள், குறைவான ஊக்கத்தையே பயன்படுத்தின.

3. சமுதாய வளர்ச்சி திட்டத்தில் பஞ்சாயத்தும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

- சமுதாய வளர்ச்சி திட்டம், வெற்றியடையாமைக்கான காரணங்களை மட்டும் இக்குழு சுட்டிக்காட்டாமல் இக்குறைகளை போக்குவதற்கான பரிந்துரைகளையும், வழிமுறைகளையும் வழங்கியுள்ளது.

- ஜனநாயக அதிகார பரவலாக்கலை இக்குழு பரிந்துரைத்தது. வளர்ச்சி திட்டங்களை இதன் மூலமே மக்கள் திட்ட நிறைவேற்றலில் பங்கு பெற முடியும்.

- ''மூன்றடுக்கு பஞ்சாயத்துராஜ்'' முறையை இக்குழு பரிந்துரைத்தது. இதன்படி கிராம பஞ்சாயத்து கிராம அளவிலும், பஞ்சாயத்து சமிதி இடையிலான வட்டார அளவிலும், ஜில்லா பரிஷத்து மேல்நிலையான மாவட்ட நிலையிலும் செயல்படும். இம்மூன்றடுக்கு பஞ்சாயத்துராஜ் முறையை பற்றிய விரிவான பரிந்துரைகளை கீழே நாம் காணலாம்.

**கிராம பஞ்சாயத்து சார்ந்த பரிந்துரைகள்:**

- கிராம பஞ்சாயத்து அமைப்பு தேர்தல் மூலம் அமைக்கப்பட வேண்டும். இதில் இரண்டு பெண் உறுப்பினர்களும், ளுஊ.்.ளுவு இனத்தவரிலிருந்து ஒரு உறுப்பினரும், உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்படுவர். (ஊழ-ழிவநன)

**பணிகள்:**

- இக்குழுவின் பரிந்துரைப்படி கிராம பஞ்சாயத்து கீழ்வரும் பணிகளை மேற்கொள்ளும்.

1. வீட்டு உபயோகத்திற்கான தண்ணீர் வழங்குதல்
2. துப்புறவு
3. தெருக்கள், கழிவுநீர் கால்வாய்கள் போன்றவற்றை பராமரித்தல்
4. கிராம தெருக்களின் விளக்குகளை பராமரித்தல்
5. நில மேலாண்மை

**பஞ்சாயத்து சமிதி சார்ந்த பரிந்துரைகள்:**

- பல்வந்த்ராய் மேத்தா குழு, வட்டார அளவில் செயல்படும், உள்ளாட்சி அரசாங்கத்தை பஞ்சாயத்து சமிதி என்று அழைத்தது. இது பஞ்சாயத்துராஜ் அமைப்பின் இடைநிலையில் செயல்படும். இந்த அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட, சட்ட ரீதியான அமைப்பாகும்.

**ஜில்லா பரிஷத்து சார்ந்த பரிந்துரைகள்:**

- பஞ்சாயத்துராஜ் அமைப்பின் உச்ச நிலையில் அதாவது மாவட்ட அளவில் செயல்படும் அமைப்பு ஜில்லா பரிஷத்தாகும். இந்த அமைப்பினை பல்வந்த்ராய் மேத்தா குழு ஒரு அதிகார அமைப்பாக பார்க்காமல், மாவட்ட அளவிலான ஒரு ஆலோசனை அமைப்பாகவும் அதற்கு கீழுள்ள பஞ்சாயத்து சமிதி மற்றும் கிராம பஞ்சாயத்துகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கின்ற அமைப்பாகவுமே கருதுகிறது.

**பணிகள்:**

- பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைப்படி ஜில்லா பரிஷத்து ஒரு ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வையிடும் மேல்நிலை அமைப்பாக செயல்பட வேண்டும். எனவே இவ்வமைப்பு கீழ்காணும் பணிகளை மேற்கொள்கின்றது.

1. மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்து சமிதிகளின் வரவு-செலவு திட்டத்தை ஆராய்து ஏற்றுக் கொள்ளல்.
2. மாநில அரசு வழங்குகின்ற நிதியை பஞ்சாயத்து சமிதிகளிடையே பிரித்தளித்தல்.
3. மாவட்டத்திலுள்ள வட்டார திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தொகுத்தல்
4. பஞ்சாயத்து சமிதிகள் கோருகின்ற மானியங்களை மாநில அரசிடம் வேண்டி கேட்டல்
5. மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து சமிதிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல்

SECTION

PAGE NO.

Q.No.

விடை / **ANSWER**

APPOLO STUDY CENTRE

APPOLO STUDY CENTRE

SECTION

PAGE NO.

Q.No.

விடை / **ANSWER**

APPOLO STUDY CENTRE